**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**------**

## IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHANGARAI

Calendar :

Miscellaneous :

Preliminary register :

Sessions :

} Sessions Case No.58 of 2020

Deposition of witness for :
:

Prosecution : PW- 9
Defence :
Court :

Name : Illayappan

Father's Name :

Village :

Taluk :

Calling :

Religion :

Age :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 06th day of December 2022.**

முதல் விசாரணை:

குமாரம்பட்டி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது டிவிஎஸ் கம்பெனி ஓசூரில் பாதுகாப்பு பணி வேலை செய்கிறேன். சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு வித்தியா மந்தீர் கல்லூரியில் பொறுப்பு பாதுகாப்பு அலுவலராக பணி செய்து வந்தேன். கடந்த 2018ம் ஆண்டு 15ம் தேதி டிசம்பர் மாதம் நான் கல்லூரியில் பணியில் இருந்தபோது இரவு 10.15 முதல் 10.30 மணியளவில் செக்யூரிட்டி பணியிலிருந்த அப்புனு என்பவர் எனக்கு தொலைப்பேசியில் துப்பாக்கியால் அடிப்பட்டதாக ஒரு நபர் கேட்டின் முன்பு விழுந்து விட்டதாக எனக்கு தகவல் சொன்னார். நான் கல்லூரியிலிருந்து அந்த இடத்திற்கு வந்தேன். விழுந்த நபருக்கு தண்ணீர் கொடுத்தார்கள். விழுந்த நபர் என்னிடம் அவரது செல்போனை கொடுத்து தான் விழுந்துவிட்டது குறித்தும் காயம்பட்டது குறித்தும் தகவல் தெரிவிக்குமாறு சொன்னார் நான் அவர்களுக்கு தகவல் கொடுத்தேன். கீழே விழுந்த நபர் தன்னுடன் வந்த மற்றொரு நபரும் கீழே விழுந்துவிட்டதாக சொன்னார். அவர் சொன்ன தகவலின் பேரில் கீழே விழுந்த மற்றொரு நபரை தேடுவதற்காக நான், அப்புனு மற்றும் பிரகாஷ்குமார் 60 மீ தெற்கு நோக்கி சென்றோம். நாங்கள் சென்று டார்ச் லைட் வெளிச்சத்தில் பார்த்தபோது அந்த இடத்தில் ஆட்கள் யாரும் இல்லை. ஒரு இருசக்கர வாகனம் மட்டும் ரோட்டின் கிழபுறம் விழுந்து கிடந்தது. திரும்ப நாங்கள் அனைவரும் விடுதி கேட் அருகே வந்து 108 ஆம்புலன்ஸிற்கு நான் தகவல் தெரிவித்தேன். ஆம்புலன்ஸ் வந்தது. அதன் பின்னிட்டு ஹை வே பேட்ரோல் வாகனமும் வந்தது. ஆம்புலன்ஸில் அடிப்பட்ட நபரை ஏற்றி அனுப்பி வைத்தோம். போலீசார் என்னை அடுத்த நாள் விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை 1, 2 எதிரி தரப்பில்:

அப்புனு எனக்கு சுமார் 10.15 மணியளவில் தகவல் தெரிவித்தார். நான் 2 நிமிடங்களில் அப்புனு தகவல் சொன்ன இடமான கல்லூரி விடுதி முன்பு சென்றுவிட்டேன். காயம்பட்ட நபர் ஒரு நபருக்கு தகவல் தெரிவிக்க சொன்னதன் பேரில் நான் தகவல் தெரிவித்து அந்த நபர் வந்த பிறகு தான் ஆம்புலன்ஸிற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. தகவல் தெரிவிக்கப்பட்ட நபர் சுமார் 10.45 மணியளவில் கல்லூரி விடுதி முன்பு வந்தார். தகவல் கேட்டு அந்த நபர் வருவதற்கு முன்பு காயம்பட்ட நபருக்கு நாங்கள் முதலுதவி எதுவும் அளிக்கவில்லை தண்ணீர் கேட்டார் அளித்தோம். ஹை வே பேட்ரோல் போலீசாருக்கு நான் தகவல் தெரிவித்தேன். ஆம்புலன்ஸிம் காயம்பட்ட நபர் ஏற்றிய பிறகு தான் ஹை வே போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தனர். ஆன்புலன்ஸில் காயம்பட்ட நபர் நீங்களாக வேறு நபர்கள் ஏற்றப்பட்டனரா என்ற எனக்கு தெரியாது. விடுதிக்கு முன்பு காயம்பட்டு விழுந்த ஒரு நபரை தவிர்த்து வேறு நபரை நான் பார்க்கவில்லை.

குறுக்கு விசாரணை 3ம் எதிரி தரப்பில் 1, 2 எதிரிகளின் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்ளவதாக தெரிவிக்கப்பட்டது.

மறுவிசாரணை: இல்லை

ஒம்/-

**திரு.எம்.அஷ்பாக் அஹமத், பி.ஏ.,பி.எல்.,**
**உதவி அமர்வு நீதிபதி,**
**ஊத்தங்கரை.**